“கிராம உதயம் தேச உதயமாகும்”

மட்டுப்படுத்தப்பட்ட.....

சர்வோதய சிரமதான சங்க விதிகள்

.....

.....

சர்வோதய சிரமதான சங்க விதிகள்

முகவுரை:

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான கூட்டு (இணைவு) சங்கத்தின் தத்துவங்கள் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை புரிந்து கொண்டு அந்த சங்கத்தினால் நமது கிராமத்தில்/ நகரத்தில் நடத்தப்படுகிற கிராமோதய/நகரோதய சேவைகளில் கலந்துகொண்ட பல வித சர்வோதய குழுக்களுக்கு சொந்தமான நாங்கள் இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் ஆலோசனைப்படி நமது கிராமத்தில்/நகரத்தில் சர்வோதய கிராமோதய/நகரோதய செயற்பாடுகளை தொடர்ந்தும் அதிக பொறுப்புடன் நடத்தும் எண்ணத்துடன் ஒரு அமைப்பு ரீதியாக கீழ் வரும் விதிகளுக்கு அமைய செயற்பட ஒன்றிணைவோம்.

1 வது விதி – பெயர்

சங்கத்தின் பெயர் மட்டுப்படுத்தப்பட்ட.....சர்வோதய சிரமதான சங்கம் என குறிக்கப்படுவதோடு இனிமேல் இங்கு "அது சங்கம்" என்ற சொல் குறிக்கப்படும்.

2 வது விதி – சின்னம்

பின்னணியில் சூரிய உதயத்தைக் கொண்ட இளஞ் சிவப்பில் பூத்த தாமரைப் பூ சங்கத்தின் சின்னமாகும்.

3 வது விதி – முன் மாதிரி சுலோகம்

"கிராம உதயம் தேசத்தின் உதயமாகும்" என்பது சங்கத்தின் முன் மாதிரி சுலோகமாகும்.

4 வது விதி – கொடி

வெள்ளைப் பின்னணியில் சங்கத்தின் பெயர், சின்னம், முன்மாதிரி சுலோகம் என்பன அடங்கிய கொடி சங்கத்தின் கொடியாக இருக்கும்.

5 வது விதி – சங்கத்தின் அலுவலகம்

சங்கத்தின் அலுவலகம்.....கிராமத்தில்/நகரத்தில் நடாத்தப்பட வேண்டும் .....

.....

.....

6 வது விதி – பொதுக் கொள்கைகள்

i. கீழ்வரும் பொதுக் கொள்கைகள் சங்கத்தின் பொதுக் கொள்கைகளாகும்.

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கதின் தத்துவங்கள் பொதுக் கொள்கைகள் பொது இலட்சியம் அபிவிருத்தி வேலைகள்.....கிராமத்தின்/நகரத்தின் எல்லாப் பிரதேசத்திற்குள் மக்களுக்கு புரிந்துணர்வை உண்டாக்குதல் சுய முயற்சியையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புதல், மக்களின் பங்களிப்போடு அவற்றைச் செயற்படுத்தல்.

ii. .....கிராமத்தின்/நகரத்தின் எல்லைப் பிரதேசத்திற்குள் செற்படுத்தப்படும் பல வித குழு அமைப்புக்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்குதல்.

iii. கீழ்வரும் அடிப்படை மனிதத் தேவைகளை பூர்த்தியாக்கும் போது கொள்கைத் திட்டமிடல், அவற்றை செயற்படுத்துதல் முடிவுகளை மீளாய்வு செய்தல் தொடர்பாக தேவையான தலைமைத்துவத்தை ஒழுங்கு செய்தல்.
(அ) சுற்றாடல் (ஆ) நீர் (இ) உடை (ஈ) உணவு (உ) வீடு (ஊ) சுகாதாரம் (எ) வெகுசன தொடர்பு (ஏ) எரிபொருள் (ஐ) கல்வி (ஒ) ஆன்மீக கலாசார தேவைகள்.

iv. கிராமத்தில் நகரத்தில் மற்றும் சுற்றியிருக்கும் கிராமங்களில் நகரங்களில் செற்படும் சர்வோதய குழுக்கள், சர்வோதய சிரமதான கல்வி நிறுவனம் மற்றும் வேறு சர்வோதய நிறுவனங்களுடன் தலைமை நிலையத்துடன் தொடர்பு கொள்ள நிறுவனமாக செயற்படுதல்: சக

v. கிராம அபிவிருத்திக்காக அரசாங்கத்தில், மாகாண சபை நிறுவனத்தில், வேறு தேசிய மக்கள் நிறுவனங்களில், அரச கூட்டுத்தாபனங்களில் மற்றும் தனிப்பட்ட முறையில் பெறக்கூடிய உதவிகள் சேவைகள் என்பவற்றைப் பெறுதல்.

vi. சங்கத்தின் நலன்புரி சேவைத் திட்டங்கள், திட்டங்கள் அமைத்தல், செயற்படுத்தல், தொழில் வாய்ப்புக்களை உண்டாக்குவதோடு இந்த நலன்புரி சேவைத்திட்டத்தின் மூலமாக திட்டங்களை அமுல் படுத்தி பணம் சம்பாதித்து அவற்றை நடைமுறைப்படுத்தும் செயலுக்காக சங்கத்தின் ஆதிக்கப் பிரதேசத்தில் பொருளாதார நிதி அபிவிருத்தி செய்தல், ஒழுங்கமைத்தல், அவற்றில் ஈடுபடுதல் அச் செயல்களைச் செய்தல் என்பன.

vii. சங்கத்தின் ஆதிக்கப் பிரதேசத்தில் கைத்தொழில்களை விரிவுபடுத்த, அபிவிருத்தி செய்ய, முன்னேற்ற ஒத்துழைப்பு நல்குதல்.

viii. தேசிய கைத்தொழல் விவசாய உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்த உதவுதலும் அவற்றை விரிவுபடுத்தலும்.

ix. கிராமத்தில் கைத்தொழில் விவசாய வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தேவையான அல்லது பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல், கிராமங்களுக்கிடையில் கைத்தொழில் விவசாய மற்றம் விற்பனைக் களங்களை தேசிய ரீதியில் அளவிட ஒத்துழைப்பு நல்குதல்.

x. முதலீடு, கடன், விற்பனை நிலையம், முகாமைத்துவம், கைத்தொழில் வசதிகள், சட்ட ஆலோசனைகள், திட்டமைப்புக்கள் உட்பட கிராமத்தில் செயற்படுத்தப்படுகிற ஏதாவது கைத்தொழில் விவசாய முயற்சிகளுக்கு அல்லது திட்டங்களுக்குத் தேவையான சகல விபரங்களுக்குறிய சேவை வசதிகளை செய்து கொடுத்தலும்: சக

xi. இந்த விதிகளில் குறிக்கப்பட்டுள்ள இலட்சியங்களைப் பூர்த்தியாக்கிக் கொள்வதில் அவசியமான அல்லது பொருத்தமானதெனக் கருதக்கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

7வது விதி – பொதுக் கொள்கைகள்

சங்கத்தின் அங்கத்தினர்களால் கீழ்வரும் பொதுக் கொள்கைகள் பத்தும் பின்பற்றப்படுவதற்கு முயற்சியெடுக்க வேண்டியதும் ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்படுதல்.

i. எல்லாசந்தர்பங்களிலும் சத்தியம், அஹிம்சை, தன்னலத்தன்மை என்பவற்றைப் பின்பற்றுதல்.

ii. சங்கத்தின் பரிசுத்தத்தை பாதுகாத்துக் கொள்ளக்கூடும் எண்ணத்தில் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொள்ளாமை.

iii. எழிமையான வாழ்கை முறையை பின்பற்றுதல்.

iv. தனிப்பட்ட சொத்துரிமை, போட்டி, கோபம், பேராசை என்பவற்றை முதன்மையாகக் கொண்ட தற்காலிக வாழ்கை முறைக்குப் பதில், பொது உரிமை, பங்களிப்பு, அன்பு, ஆத்ம தியாகம் என்பவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட சர்வோதய சமுதாய முறையொன்றை அஹிம்சை வழியில் கட்டியெழுப்ப முயல்தல்.

v. நமது கலாசார உரிமைகளான அன்பு, கருணை, மகிழ்ச்சி, பொறுமை என்ற நால்வகை குணங்களையும் தானம், இன்சொல், நன்நடத்தை, சக சமநிலை ஆகிய நால்வகை பண்புகளையும் முதன்மையாகக் கொண்ட தானியக் களஞ்சியம், தர்மத்தீவு என்ற குறிக்கோள்களுக்கமைய இலங்கையில் மாற்றத்தை உண்டாக்க உழைத்தல்.

vi. சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வழிமுறைகள் நல்லவகையாக, பரிசுத்தமானவைகளாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளல்.

vii. அங்கத்துவம் பெற்றிருக்கின்றவர்கள் நிறைவேற்று சபையினதும், முத்தோர் சபையினதும் தீர்மானங்களுக்கு கீழ்படிய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதோடு அந்த தீர்மானங்களின் படி யாராவது ஒரு அங்கத்தினருக்கு அங்கத்துவம் நீக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டால் சுயவிருப்பத்தின் பேரில் ராஜனாமா செய்வது தான் ஒரேவழி என சத்தியப்பிரமானம் செய்தல்.

viii. சமுதாய, நற்பழக்க வழக்கங்கள் கொண்ட அரசியல், பொருளாதார ரீதியில் பூரணமான அஹிம்சை புரட்சியொன்றை கிராமத்திலும், நகரத்திலும் செய்யும் போது சங்கம் எடுத்த முதல் நடவடிக்கை சிரமதானம் என்பதைப் புரிந்து கொண்டு நேர்மை, சம நிலை என்பதை பிரதான லட்சணமாக கொண்டு எவ்வித பாதிப்புகளுமின்றி சர்வோதய சமுதாய முறையொன்றை உருவாக்குவதற்காக காலத்திற்கேற்ற வகையில் எடுக்கப்பட்ட வேறு சர்வோதய நடவடிக்கைகள் செயல்முறைகள் பற்றி கவனமாக செயலாற்றுதல்.

ix. கல்விஞானமும் ஆன்மீக பண்புகளும் சம அளவில் ஒன்று சேர்கின்ற கிராமிய மற்றும் நகர மக்களால் உருவாக்கப்பட்ட சுதந்திரமான மக்கள் அரசொன்றை நாட்டுக்குள் உருவாக்கி ஒற்றுமை, பங்களிப்பு, இனங்களுக்கிடையிலான சுதந்திர அடிப்படையிலான ஐக்கிய நாடுகள் பொது சபையொன்று உலகில் உருவாக்கி அது உலக ஒற்றுமையையும், மனிதவர்க்கத்தின் ஆகக்கூடிய மகிழ்ச்சியையும் பெறக்கூடிய ஒரு வழி என்பதை புரிந்து கொண்டு அந்த இலட்சியம் நிறைவேற முயற்சி செய்தலும்: சக

x. கிராமத்தின்/நகரத்தின் பலதரப்பட்ட சர்வோதய குழுக்களுக்கு முன்மாதிரியாக காட்டக்கூடிய வகையில் ஒற்றுமையாக கூடி, கலந்துரையாடி, ஒற்றுமையாக தீர்மானங்களை எடுத்து, ஒற்றுமையாகச் சங்கத்தின் வேலைகளை முடித்து ஒற்றுமையாக கலைந்து செல்லும் கொள்கையைப் பின்பற்றுதல்.

8வது விதி – சத்தியப்பிரமாணம்

i. சங்கத்தின் அங்கத்துவத்தை விரும்புகின்ற எல்லோரும் சங்கத்தில் சேரும் போது கீழ்வரும் முறைப்படி சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

ii. சங்கத்தின் சகல வருடாந்த மகாசபை கூட்டத்தின் போதும் அங்கத்தினர்களால் ஒற்றுமையாக இந்த சத்தியப்பிரமாணம் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

iii. எனது அங்கத்துவம், ஒழுக்கம் தொடர்பான சகல பிரச்சினைகளின் போதும் சங்கத்தின் நிறைவேற்று சபையும், முத்தோர் சபையும் எடுக்கும் தீர்மானங்களை இறுதித்தீர்மானங்களாக ஏற்றுக்கொள்வேன் என இத்தால் சத்தியப்பிரமாணம் செய்கிறேன். மேலும் சங்கத்தின் சட்டவிதிகளுக்கமைய எனது அங்கத்துவம் அல்லது நான் வகிக்கும் பதவி என்பவற்றை ஏதாவதொரு சந்தர்பத்தில் நான் இழக்கநேரிட்டால் அதன் காரணமாக எனக்கு எந்தவொரு தனிப்பட்ட பாதிப்பும் அல்லது அவமானமும் ஏற்பட்டது என கருதாமல் என்னால் ஏற்பட்ட தாமதம், கொள்கைமீறல் போன்ற பலவீனங்களில் இருந்து விடுபட்டு மீண்டும் என்றாவது ஒரு நாள் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு தகுதியானவராக ஆவதற்கு சத்தியப்பிரமாணம் செய்கிறேன்.

9வது விதி – அங்கத்துவம்

i. சங்கத்தின் அங்கத்துவத்தை ..... திகதி ..... ஆக இருப்பதோடு அது" என்னும் பிரிவை உள்ளடக்கி திருத்தப்படுகிறது.

(அ) .....கிராமத்தில்/நகரத்தில் வசிக்கும் 7 வயதுக்கு மேற்பட்ட எந்த சர்வோதய குழுக்கு சம்பந்தமான அங்கத்தினருக்கு அல்லது அங்கத்தினர்களால்: சக

(ஆ) மக்களுக்காக உதவி செய்யும் சங்கத்தின் நிறைவேற்று சபையால் கௌரவ அங்கத்தினர் பதவியை ஏற்றுக்கொள்வதாக அழைப்பு விடப்பட்ட மதகுருமார் , அரசாங்க அதிபர்களுக்கும் இடைவெளி உள்ளது.

ii. அங்கத்துவத்தைப் பெறுவதற்காக குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அங்கத்துவ கட்டணத்துடன் சங்கத்தின் பிரதான செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்பு அந்த விண்ணப்பதாரிக்கு அங்கத்துவம் வழங்க நிறைவேற்று சபை கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்கும்.

iii. அங்கத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பு அந்த அங்கத்தினர்களால் சங்கத்தின் கொள்கைகளும் சத்தியப்பிரமாணமும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென கருதப்படும்.

iv. சங்கத்தின் அங்கத்தினராக சேர்ந்து கொள்ளல், அங்கத்துவம் வழங்குதலை மறுத்தல், அங்கத்துவத்தை நிறுத்துதல், அங்கத்துவத்தில் இருந்து அகற்றுதல் போன்றவை தொடர்பாக சகல அதிகாரங்களும் சங்கத்தின் நிறைவேற்று சபைக்கு இருக்கின்றன.

v. அங்கத்துவம் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகளின் போது சங்கத்தின் மகாசபைக் கூட்டத்திலும் அல்லது வேறு எவருக்கும் நிறைவேற்று சபை தாம் எடுத்த தீர்மானங்களுக்கு காரணம் வெளியிட கட்டுப்பட்டிருக்காது ஆனாலும் நிறைவேற்று சபையால் எடுக்கப்படும் அந்த தீர்மானங்களை உறுதிப்படுத்துவதற்காக சங்கத்தின் மகா சபை கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

vi. அங்கத்துவம் ஐந்து பிரிவுகளையுடையது. அதாவது சிறுவர் அங்கத்துவம், இளைஞர் அங்கத்துவம், சாதாரண அங்கத்துவம், நிரந்தர அங்கத்துவம், கௌரவ அங்கத்துவம் என்பனவாகும்.

vii. 7வயதுக்கு மேற்பட்ட ஆனால் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் சிறுவர் அங்கத்தினர்களாகவும், 14 வயதுக்கு மேற்பட்ட 26 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் இளைஞர் அங்கத்தினர்களாகவும், 26 வயதுக்கு மேற்பட்டவர்கள் சாதாரண அங்கத்தினர்களாகவும், இதில் 10 (iv) வது விதியில் குறிப்பிட்ட அங்கத்துவ கட்டனத்தை செலுத்துகின்றவர்கள் நிரந்தர அங்கத்தினர்களாகவும், 9 (i) வது விதியின் கீழ் அழைக்கப்படுகின்றவர்கள் கௌரவ அங்கத்தினர்களாகவும் குறிக்கப்படுவர்.

viii. எந்த அங்கத்தினருக்கும் தனிப்பட்ட பிரயோசனம், எந்த உரிமையும் பெற முடியாது.

10 வது விதி – அங்கத்துவக் கட்டணம்

i. சிறுவர் அங்கத்தினர் ஒருவர் வருடத்திற்கு ஒரு ரூபா அங்கத்துவக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

ii. இளைஞர் அங்கத்தினர் ஒருவர் வருடமொன்றுக்கு 6 ரூபாய் அங்கத்துவக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

iii. சாதாரண அங்கத்தினர் ஒருவர் வருடமொன்றுக்கு 24 ரூபாய் அங்கத்துவக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

iv. ஒரே முறையில் 240 ரூபா செலுத்துகின்ற அல்லது அங்கத்துவம் பெற்ற திகதியில் இருந்து ஒரு வருடத்துக்குள் 3 முறைகளில் குறிப்பிட்ட பணத்தை செலுத்துகின்ற அங்கத்தினர்கள் நிரந்தர அங்கத்தினராக கருதப்படுவர்.

v. 9 (i) (ஆ) விதியில் குறிப்பிட்ட அங்கத்தினர்கள் அங்கத்துவக் கட்டணம் செலுத்த கட்டுப்பட்டிருந்தாலும் சுயவிருப்பத்தின்பேரில் சங்கத்திற்கு நன்கொடை வழங்கலாம்.

vi. சிறுவர், இளைஞர், சாதாரண சாதாரண வகுப்பு அங்கத்தினர்கள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 31ம் திகதிக்கு முன் அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

vii. சங்கத்தின் நிறைவேற்று சபையின் தீர்மானத்தினால் அல்லது ராஜனாமா செய்ததினால் அல்லது வேறு ஏதாவது வழியினால் தமது அங்கத்துவத்தை இழக்கின்ற அங்கத்தவர்களுக்கு தாம் அங்கத்துவம்வகித்த காலத்தின் சந்தாப் பணத்தை மீளப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியாது.

11 வது விதி – அங்கத்துவப் பதிவுப் புத்தகம்

அங்கத்தினரின் பெயர், அங்கத்துவ தரம், நிரந்தர முகவரி, சேவை முகவரி, அங்கத்துவம் பெற்ற திகதி, அங்கத்துவத்தை இழந்த திகதி மற்றும் சங்கத்தின் பிரதான செயலாளர் தமக்கு முக்கியம் என கருதுகின்ற விபரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகம் ஒன்றை சங்கத்தின் பிரதான செயலாளர் வைத்திருக்க வேண்டும்.

12 வது விதி – நிறைவேற்று சபை

i. சங்கத்தின் வருடாந்த மகா சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தரத்திற்கும் உரிய 25 பேர்களுக்கு கூடாத அங்கத்தினர்களைக் கொண்ட நிறை வேற்று

கூடாத அங்கத்தினர்களைக் கொண்ட நிறை வேற்று சபையொன்று சகல செயற்பாடுகளையும் சங்க விதிகளுக்கமைய நிர்வகித்தல் வேண்டும்.

ii. நிறைவேற்று சபைக்குவரும் அங்கத்தினர்கள் முறைப்படி சங்க அங்கத்தினர்கள் மத்தியில் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(அ) சிறுவர் அங்கத்தினர்கள் மூன்று பேர்
(ஆ) இளைஞர் அங்கத்தினர்கள் மூன்று பேர்
(இ) சாதாரண அங்கத்தினர்களில் மூன்று தாய்மார்கள்
(ஈ) சங்கத்தின் மகா சபைக் கூட்டத்தில் மதகுருமார் சாதாரண கௌரவ அங்கத்தினர்கள் நிரந்தர அங்கத்தினர்களில் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்:சக
(உ) சாதாரண அல்லது இளைஞர் அங்கத்தினர் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட இன்னும் ஒன்பது அங்கத்தினர்கள்.

iii. சங்கத்தின் பொதுக் கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் எதிராக ஒருவர் செயற்பட்டுள்ளார் என சிறுவர் அங்கத்தினர் அல்லாத சங்க அங்கத்தினர் 10 பேர் கையெழுத்திட்டு பிரேரனை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தால் அதன் பின் ஏதாவது ஒரு பேரவைக் கூட்டத்தின்போது வாக்களிக்கும் அங்கத்தினர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு மேல் பெற்று நிறைவேற்று சபையில் அந்த அங்கத்தினர் சங்கத்தின் பொதுக்கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் எதிராக செயற்பட்டார் என்ற காரணத்தினால் குறிப்பிட்ட பதவியில் இருந்து நீக்கிவிட முடியும் அந்த அங்கத்தினர் மீது அந்த கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

iv. உப பிரிவாக கீழ்வரும் பந்தி புதிதாக சேர்க்கப்படுகிறது. புது வருடத்திற்காக அமைக்கப்படும் நிறைவேற்று சபை அதற்கடுத்த வருட பேரவைக் கூட்டம் நடைபெறும் திகதி வரை தனது உத்தியோக பூர்வ கடமைகளை செய்யும்.

13 வது விதி – நிறைவேற்று சபையின் விதிகள்

i. சங்கத்தின் நிறைவேற்று சபை ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

ii. நிறைவேற்று சபைக் கூட்டத்தின் போது 11 அங்கத்தினராவது பிரசன்னமாய் இருக்க வேண்டும்.

iii. மகா சபைக் கூட்டம் முடிந்த அன்றே நிறைவேற்று சபையின் முதலாவது கூட்டத்தை நடாத்தி மூத்தோர் சபையின் அங்கத்தினர்கள் அல்லாத நிறைவேற்று சபையின் மற்ற அங்கத்தினர்களின் மத்தியில் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தெரிவு செய்ய வேண்டும்.

iv. மூத்தோர் குழுவுக்கு சொந்தமான நிறைவேற்று சபையின் அங்கத்தினர்கள் நிறைவேற்று சபைக் கூட்டங்களின் போது வாக்களித்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

v. சங்கத்தின் சாதாரண நிர்வாக செயல்கள் தொடர்பாக சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் சங்கத்தின் தலைவர், பிரதான செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கே உண்டு.

vi. மாதாந்த கூட்டத்திற்குரிய திகதியை நிறைவேற்று சபை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

vii. முன்று நாட்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவிப்பதன் மூலம் நிறைவேற்று சபையின் அவசரக் கூட்டமொன்றைக் கூட்ட முடியும்.

viii. சகல நிறைவேற்று சபைக் கூட்டங்களின் போதும் அதன் தலைவர் அல்லது அவர் இல்லாதவிடத்து நிறைவேற்று சபையால் தெரிவு செய்யப்படுகிற முத்தோர் சபை அங்கத்தினர் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும்.

ix. நிறைவேற்று சபையின் சகல தீர்மானங்களும் அதிகப்படியான வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்துடன் சமமான வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால் தலைவரின் தீர்மானிக்கும் இறுதி வாக்கை உபயோகிக்க முடியும்.

14 வது விதி – நிறைவேற்று சபையின் அதிகாரங்களும் கடமைகளும்

சங்கத்தின் நிறைவேற்று சபையால் கீழ்வரும் அதிகாரங்களும் கடமைகளும் செயற்பாடுகளும் நிறைவேற்றப்படலாம்.

i. சங்கத்திற்கு அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளல், அவர்களின் அங்கத்துவத்தை நிறுத்தி வைத்தல், விலக்குதல் போன்ற சகல விடயங்களையும் செயலாளரின் பிரேரனையின் மீது தீர்மானித்தல்.

ii. அதிகாரிகளுக்கு கடமைகளை பிரித்துக்கொடுத்தல், அவர்களின் நடத்தைகளை நிர்வகித்தல், சேவையிலிருந்து நீக்குதல் போன்ற அதிகாரங்களை செயற்படுத்துதல்.

iii. நிறைவேற்று சபையினதும், முத்தோர் சபையினதும் தலைவர், பிரதான செயலாளர் , பொருளாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

iv. உப குழுக்களை அமைத்து அவைகளுக்கு கடமைகளை பொறுப்புக் கொடுத்தலும், அவற்றை கலைத்தலும்.

v. குறிப்பிட்ட சர்வோதய குழுக்கள் மூலமாக செய்யப்படுகிற கிராமோதய வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தலும் செயற்பாடுகளின் போது அவற்றிற்கு வழி காட்டுதலும்.

vi. முழு நேர ஊழியர்கள், முன்னர் பாடசாலை பெண்மேற்பார்வையாளர்கள், சுகாதார சேவகிகள் , பொது சமையல் அறை சேவகிகள், குழந்தை பராமரிப்பு நிலைய சேவகிகள், மற்றும் வேறு கிராமோதய சேவக சேவகிகள் போன்றோரை தேவையான அளவு நியமித்தல், அவர்களை

கூடாத அங்கத்தினர்களைக் கொண்ட நிறை வேற்று சபையொன்று சகல செயற்பாடுகளையும் சங்க விதிகளுக்கமைய நிர்வகித்தல் வேண்டும்.

ii. நிறைவேற்று சபைக்குவரும் அங்கத்தினர்கள் முறைப்படி சங்க அங்கத்தினர்கள் மத்தியில் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(அ) சிறுவர் அங்கத்தினர்கள் மூன்று பேர்
(ஆ) இளைஞர் அங்கத்தினர்கள் மூன்று பேர்
(இ) சாதாரண அங்கத்தினர்களில் மூன்று தாய்மார்கள்
(ஈ) சங்கத்தின் மகா சபைக் கூட்டத்தில் மதகுருமார் சாதாரண கௌரவ அங்கத்தினர்கள் நிரந்தர அங்கத்தினர்களில் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்:சக
(உ) சாதாரண அல்லது இளைஞர் அங்கத்தினர் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட இன்னும் ஒன்பது அங்கத்தினர்கள்.

iii. சங்கத்தின் பொதுக் கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் எதிராக ஒருவர் செயற்பட்டுள்ளார் என சிறுவர் அங்கத்தினர் அல்லாத சங்க அங்கத்தினர் 10 பேர் கையெழுத்திட்டு பிரேரனை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தால் அதன் பின் ஏதாவது ஒரு பேரவைக் கூட்டத்தின்போது வாக்களிக்கும் அங்கத்தினர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு மேல் பெற்று நிறைவேற்று சபையில் அந்த அங்கத்தினர் சங்கத்தின் பொதுக்கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் எதிராக செயற்பட்டார் என்ற காரணத்தினால் குறிப்பிட்ட பதவியில் இருந்து நீக்கிவிட முடியும் அந்த அங்கத்தினர் மீது அந்த கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

iv. உப பிரிவாக கீழ்வரும் பந்தி புதிதாக சேர்க்கப்படுகிறது. புது வருடத்திற்காக அமைக்கப்படும் நிறைவேற்று சபை அதற்கடுத்த வருட பேரவைக் கூட்டம் நடைபெறும் திகதி வரை தனது உத்தியோக பூர்வ கடமைகளை செய்யும்.

13 வது விதி – நிறைவேற்று சபையின் விதிகள்

i. சங்கத்தின் நிறைவேற்று சபை ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

ii. நிறைவேற்று சபைக் கூட்டத்தின் போது 11 அங்கத்தினராவது பிரசன்னமாய் இருக்க வேண்டும்.

iii. மகா சபைக் கூட்டம் முடிந்த அன்றே நிறைவேற்று சபையின் முதலாவது கூட்டத்தை நடாத்தி மூத்தோர் சபையின் அங்கத்தினர்கள் அல்லாத நிறைவேற்று சபையின் மற்ற அங்கத்தினர்களின் மத்தியில் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தெரிவு செய்ய வேண்டும்.

iv. மூத்தோர் குழுவுக்கு சொந்தமான நிறைவேற்று சபையின் அங்கத்தினர்கள் நிறைவேற்று சபைக் கூட்டங்களின் போது வாக்களித்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

v. சங்கத்தின் சாதாரண நிர்வாக செயல்கள் தொடர்பாக சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் சங்கத்தின் தலைவர், பிரதான செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கே உண்டு.

vi. மாதாந்த கூட்டத்திற்குரிய திகதியை நிறைவேற்று சபை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

vii. முன்று நாட்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவிப்பதன் மூலம் நிறைவேற்று சபையின் அவசரக் கூட்டமொன்றைக் கூட்ட முடியும்.

viii. சகல நிறைவேற்று சபைக் கூட்டங்களின் போதும் அதன் தலைவர் அல்லது அவர் இல்லாதவிடத்து நிறைவேற்று சபையால் தெரிவு செய்யப்படுகிற முத்தோர் சபை அங்கத்தினர் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும்.

ix. நிறைவேற்று சபையின் சகல தீர்மானங்களும் அதிகப்படியான வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்துடன் சமமான வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால் தலைவரின் தீர்மானிக்கும் இறுதி வாக்கை உபயோகிக்க முடியும்.

14 வது விதி – நிறைவேற்று சபையின் அதிகாரங்களும் கடமைகளும்

சங்கத்தின் நிறைவேற்று சபையால் கீழ்வரும் அதிகாரங்களும் கடமைகளும் செயற்பாடுகளும் நிறைவேற்றப்படலாம்.

i. சங்கத்திற்கு அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளல், அவர்களின் அங்கத்துவத்தை நிறுத்தி வைத்தல், விலக்குதல் போன்ற சகல விடயங்களையும் செயலாளரின் பிரேரனையின் மீது தீர்மானித்தல்.

ii. அதிகாரிகளுக்கு கடமைகளை பிரித்துக்கொடுத்தல், அவர்களின் நடத்தைகளை நிர்வகித்தல், சேவையிலிருந்து நீக்குதல் போன்ற அதிகாரங்களை செயற்படுத்துதல்.

iii. நிறைவேற்று சபையினதும், முத்தோர் சபையினதும் தலைவர், பிரதான செயலாளர் , பொருளாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

iv. உப குழுக்களை அமைத்து அவைகளுக்கு கடமைகளை பொறுப்புக் கொடுத்தலும், அவற்றை கலைத்தலும்.

v. குறிப்பிட்ட சர்வோதய குழுக்கள் மூலமாக செய்யப்படுகிற கிராமோதய வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தலும் செயற்பாடுகளின் போது அவற்றிற்கு வழி காட்டுதலும்.

vi. முழு நேர ஊழியர்கள், முன்னர் பாடசாலை பெண்மேற்பார்வையாளர்கள், சுகாதார சேவகிகள் , பொது சமையல் அறை சேவகிகள், குழந்தை பராமரிப்பு நிலைய சேவகிகள், மற்றும் வேறு கிராமோதய சேவக சேவகிகள் போன்றோரை தேவையான அளவு நியமித்தல், அவர்களை

நீக்குதல், அவர்களின் நடத்தைகளை நிர்வகித்தல், கொடுப்பனவு அல்லது கட்டணங்களை அனுமதித்தல்.

vii. பிரதான செயலாளர் ஊடாக சங்கத்தின் சகல கடிதக்கோவைகளும் வைத்திருத்தல் , அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும் கையாள்தலும்.

viii. பொருளாளர் ஊடாக சங்கத்தின் கணக்கு வருமானம், செலவு தொடர்பான எழுத்து மூல பட்டியல் தயாரித்து வைத்தலும், அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும்.

ix. சங்கத்தின் சகல கணக்குகளையும் பரிசோதனை செய்வதற்காக சங்க சட்டவிதிகளுக்கமைய அனுமதிக்கப்பட்ட கணக்கு பரிசோதகர்களை நியமித்தல்.

x. அவ் விதம் நியமிக்கப்பட்ட கணக்கு பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கையை மகா சபைக் கூட்டத்தில் வெளியிடுதல்.

xi. சங்கத்தின் உபயோகத்திற்காக காணி , கட்டிட உபகரணங்கள் அல்லது பண நன்கொடைகள் அல்லது வங்கிக் கடன்கள் போன்ற வேறு தகுதியான முறைகளின் மூலம் பெறக்கூடியவற்றை சங்கத்தின் குறிக்கோள்களை கருத்திற் கொண்டு அவற்றை உபயோகித்தலும், முதலீடு செய்தலும்.

xii. இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம், அத்தோடு இணைந்த வேறு நிறுவனங்கள், மற்ற சர்வோதய சிரமதான சங்கம், அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் தொடர்பையும் நட்புறவையும் வலுப்படுத்திக் கொள்தல்.

xiii. சங்கத்தின் கொள்கைகளுக்கும் ஏற்றபடி வேறு வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தலும், அவற்றை செயற்படுத்தலும்.

xiv. சங்கத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் மற்றும் விசேஷ, சாதாரண மகாசபைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டிய அழைப்பை பிரதான செயலாளர் விடுக்க வேண்டும்.

xv. சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் கருத்துடைய கிராமத்தின் தொழிந்நுட்ப, விவசாய அபிவிருத்திகளுக்குரிய ஏதாவது தொழிந்நுட்ப, விவசாய அல்லது விற்பனை முயற்சிகளில் ஈடுபடுதல்.

xvi. சங்கத்தால் செய்யப்பட்ட சேவை அல்லது வழங்கப்பட்ட வசதிகள் அல்லது உபகரணங்கள் தொடர்பான கட்டணங்கள் அல்லது வேறு அறவிடுதல்களை அறவிடுதல்.

xvii. சங்கத்தின் கொள்கை செயல்களுக்காக தேவையான எதையும் உண்டாக்குதல், உற்பத்தி செய்தல், விலைகொடுத்து வாங்குதல் அவற்றை நடத்துதல்.

xviii. சங்கத்தின் கொள்கை, செயல்களுக்காக தேவையான சகல ஒப்பந்தங்களுக்கும் அல்லது சம்மதங்களுக்கும் நேரடியாகவோ அல்லது சங்கத்தினாலோ அல்லது அதற்கான அதிகாரமுடைய சங்கத்தில் யாராவது ஒரு அதிகாரியினாலோ அல்லது பிரதிநிதியினாலோ அந்த ஒப்பந்தத்தை அல்லது சம்பந்தப்பட்ட செயலை நிறைவேற்றுதல் அல்லது செயற்படுத்துதல்.

xix. சங்கத்தின் கொள்கை செயலுக்காக வங்கிகள், நிதிநிறுவனங்கள், கடன் வழங்கும் சங்கங்கள் அல்லது வேறு யாராவது நபர்களிடம் கடனாகப் பணம் பெற்றுக்கொள்தல்.

xx. கிராமத்தில் நடத்தப்படுகிற ஏதாவது தொழிந்நுட்ப, விவசாய மற்றும் விற்பனை முயற்சிகள், வேலைத்திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் போன்றவற்றிக்காக சங்கத்தின் அங்கத்தினர் ஒருவருக்கு அல்லது வேறு யாராவது ஒருவருக்கு கடன் கொடுத்தல் மற்றும்: சக

xxi. சங்கத்தின் குறிக்கோளை சரியாக நிறைவேற்றிக் கொள்ளல், நிறைவேற்று சபையின் அதிகாரங்கள் கடமைகள் போன்றவற்றை செயற்படுத்துவதற்காக அவசியம் என்று நிறைவேற்று சபையால் கருதப்படுகிற வேறு சகல செயல்களையும் செய்தல்.

15 வது விதி - முத்தோர் சபை

ஏதாவது ஒரு விடயத்தில் நிறைவேற்று சபையால் முடிவு எடுக்க முடியாத போது அந்த விடயத்தை முத்தோர் சபையின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியதோடு அதற்கு முத்தோர் சபை எடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்று சபை ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்பட வேண்டும்.

16 வது விதி – தலைவர்

தலைவரால்

i. சங்கத்தின் சகல பணிகளும் பரீட்சிக்கப்பட்டு அவை நடத்தப்படுதல்.

ii. நிறைவேற்று சபையின் தீர்மானத்தை மகாசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் போன்றவை செய்யப்படுதல் வேண்டும்.

17 வது விதி – பிரதான செயலாளர்

பிரதான செயலாளரால்

i. வருடாந்த மற்றும் மகா சபைக் கூட்டம், நிறைவேற்று சபைக் கூட்டம் போன்றவற்றை கூட்டுதல் , சங்கத்தின் நிறைவேற்று சபையின் அறிக்கைகளை தயாரித்தல், வாராந்தம் கடிதங்களுக்கு கையெழுத்திடுதல், நிறைவேற்று சபை தமக்கு ஒப்படைக்கும் வேறு கடமைகளையும் நிறைவேற்றுதல்.

ii. சங்கத்தின் முத்திரை, உறுதி மற்றும் சகல முக்கியமான கடிதக்கோவைகளையும் பாதுகாப்பாக வைத்திருத்தலும்: சக

iii. ஒவ்வொரு வருடமும் ஜுன் 30ம் திகதிக்கு முன் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களின் பெயர், முகவரி, அங்கத்தினர் பட்டியல் என்பவற்றை சங்கப் பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

நீக்குதல், அவர்களின் நடத்தைகளை நிர்வகித்தல், கொடுப்பனவு அல்லது கட்டணங்களை அனுமதித்தல்.

vii. பிரதான செயலாளர் ஊடாக சங்கத்தின் சகல கடிதக்கோவைகளும் வைத்திருத்தல் , அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும் கையாள்தலும்.

viii. பொருளாளர் ஊடாக சங்கத்தின் கணக்கு வருமானம், செலவு தொடர்பான எழுத்து மூல பட்டியல் தயாரித்து வைத்தலும், அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும்.

ix. சங்கத்தின் சகல கணக்குகளையும் பரிசோதனை செய்வதற்காக சங்க சட்டவிதிகளுக்கமைய அனுமதிக்கப்பட்ட கணக்கு பரிசோதகர்களை நியமித்தல்.

x. அவ் விதம் நியமிக்கப்பட்ட கணக்கு பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கையை மகா சபைக் கூட்டத்தில் வெளியிடுதல்.

xi. சங்கத்தின் உபயோகத்திற்காக காணி , கட்டிட உபகரணங்கள் அல்லது பண நன்கொடைகள் அல்லது வங்கிக் கடன்கள் போன்ற வேறு தகுதியான முறைகளின் மூலம் பெறக்கூடியவற்றை சங்கத்தின் குறிக்கோள்களை கருத்திற் கொண்டு அவற்றை உபயோகித்தலும், முதலீடு செய்தலும்.

xii. இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம், அத்தோடு இணைந்த வேறு நிறுவனங்கள், மற்ற சர்வோதய சிரமதான சங்கம், அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் தொடர்பையும் நட்புறவையும் வலுப்படுத்திக் கொள்தல்.

xiii. சங்கத்தின் கொள்கைகளுக்கும் ஏற்றபடி வேறு வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தலும், அவற்றை செயற்படுத்தலும்.

xiv. சங்கத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் மற்றும் விசேஷ, சாதாரண மகாசபைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டிய அழைப்பை பிரதான செயலாளர் விடுக்க வேண்டும்.

xv. சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் கருத்துடைய கிராமத்தின் தொழிந்நுட்ப, விவசாய அபிவிருத்திகளுக்குரிய ஏதாவது தொழிந்நுட்ப, விவசாய அல்லது விற்பனை முயற்சிகளில் ஈடுபடுதல்.

xvi. சங்கத்தால் செய்யப்பட்ட சேவை அல்லது வழங்கப்பட்ட வசதிகள் அல்லது உபகரணங்கள் தொடர்பான கட்டணங்கள் அல்லது வேறு அறவிடுதல்களை அறவிடுதல்.

xvii. சங்கத்தின் கொள்கை செயல்களுக்காக தேவையான எதையும் உண்டாக்குதல், உற்பத்தி செய்தல், விலைகொடுத்து வாங்குதல் அவற்றை நடத்துதல்.

xviii. சங்கத்தின் கொள்கை, செயல்களுக்காக தேவையான சகல ஒப்பந்தங்களுக்கும் அல்லது சம்மதங்களுக்கும் நேரடியாகவோ அல்லது சங்கத்தினாலோ அல்லது அதற்கான அதிகாரமுடைய சங்கத்தில் யாராவது ஒரு அதிகாரியினாலோ அல்லது பிரதிநிதியினாலோ அந்த ஒப்பந்தத்தை அல்லது சம்பந்தப்பட்ட செயலை நிறைவேற்றுதல் அல்லது செயற்படுத்துதல்.

xix. சங்கத்தின் கொள்கை செயலுக்காக வங்கிகள், நிதிநிறுவனங்கள், கடன் வழங்கும் சங்கங்கள் அல்லது வேறு யாராவது நபர்களிடம் கடனாகப் பணம் பெற்றுக்கொள்தல்.

xx. கிராமத்தில் நடத்தப்படுகிற ஏதாவது தொழிந்நுட்ப, விவசாய மற்றும் விற்பனை முயற்சிகள், வேலைத்திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் போன்றவற்றிக்காக சங்கத்தின் அங்கத்தினர் ஒருவருக்கு அல்லது வேறு யாராவது ஒருவருக்கு கடன் கொடுத்தல் மற்றும்: சக

xxi. சங்கத்தின் குறிக்கோளை சரியாக நிறைவேற்றிக் கொள்ளல், நிறைவேற்று சபையின் அதிகாரங்கள் கடமைகள் போன்றவற்றை செயற்படுத்துவதற்காக அவசியம் என்று நிறைவேற்று சபையால் கருதப்படுகிற வேறு சகல செயல்களையும் செய்தல்.

15 வது விதி - முத்தோர் சபை

ஏதாவது ஒரு விடயத்தில் நிறைவேற்று சபையால் முடிவு எடுக்க முடியாத போது அந்த விடயத்தை முத்தோர் சபையின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியதோடு அதற்கு முத்தோர் சபை எடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்று சபை ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்பட வேண்டும்.

16 வது விதி – தலைவர்

தலைவரால்

i. சங்கத்தின் சகல பணிகளும் பரீட்சிக்கப்பட்டு அவை நடத்தப்படுதல்.

ii. நிறைவேற்று சபையின் தீர்மானத்தை மகாசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் போன்றவை செய்யப்படுதல் வேண்டும்.

17 வது விதி – பிரதான செயலாளர்

பிரதான செயலாளரால்

i. வருடாந்த மற்றும் மகா சபைக் கூட்டம், நிறைவேற்று சபைக் கூட்டம் போன்றவற்றை கூட்டுதல் , சங்கத்தின் நிறைவேற்று சபையின் அறிக்கைகளை தயாரித்தல், வாராந்தம் கடிதங்களுக்கு கையெழுத்திடுதல், நிறைவேற்று சபை தமக்கு ஒப்படைக்கும் வேறு கடமைகளையும் நிறைவேற்றுதல்.

ii. சங்கத்தின் முத்திரை, உறுதி மற்றும் சகல முக்கியமான கடிதக்கோவைகளையும் பாதுகாப்பாக வைத்திருத்தலும்: சக

iii. ஒவ்வொரு வருடமும் ஜூன் 30ம் திகதிக்கு முன் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களின் பெயர், முகவரி, அங்கத்தினர் பட்டியல் என்பவற்றை சங்கப் பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

18 வது விதி – பொருளாளர்

பொருளாளர்

i. சங்கத்திற்குறிய சகல பணத்தையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்பணத்தை நிறைவேற்று சபையின் கட்டளைப்படி செலவு செய்தல் வேண்டும்.

ii. வரவு செலவுகளை சரியாக பதிந்து வைத்திருத்தல் வேண்டும்.

iii. சங்கத்திற்கு சொந்தமான சகலஉபகரணங்கள், சொத்துக்கள் என்பவைகள் சரியான களஞ்சியத்தில் இருக்க வேண்டும். அத்துடன் அவற்றைப் பற்றிய பதிவும் இருத்தல் வேண்டும்.

iv. சங்கத்திற்கு சொந்தமான சகல பணமும் நிறைவேற்று சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கியொன்றில் வைப்பில் இடப்பட வேண்டும். அப்பணம் தேவைப்படி சங்கத்தின் தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படல் வேண்டும்.

v. சங்கத்தின் கணக்கு, சங்கத்தின் அமைப்பு விதிகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு பரிசோதகர் ஒருவரினால் பரிசோதிக்கப்பட்டு அவரால் உறுதி செய்யப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கையை நிறைவேற்று சபைக்கும், மகா சபைக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

vi. சங்க சட்டபிரமாணங்களின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குப் பரிசோதகரைக் கொண்டு பரிசோதிக்கப்படும் கணக்கு அறிக்கையும், அக்கணக்கு பரிசோதிக்கப்பட்டதாக கணக்கு பரிசோதகரால் வழங்கப்படும் சான்றிதழும், வரவு நன்கொடை பொருட்கள் மற்றும் செலவுகள் பற்றிய விபரங்களும் ஜூன் 30ம் திகதிக்கு முன் சங்கப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

19 வது விதி – உப குழுவை நியமித்தல்

i. அவசியமான சகல சந்தர்பங்களிலும் கீழ்வரும் காரியங்களுக்காக உப குழுக்களை அமைக்கும் அதிகாரம் நிறைவேற்று சபைக்கு இருக்க வேண்டும்.

(அ) சிரமதான முகாம், கல்விக் கருத்தரங்கு, சேமிப்புக் கடன், கொடுக்கல் வாங்கல், பொது விற்பனை நிலையங்கள், குழந்தைகள், நலன்புரிச் செயல்கள், கல்விச் சுற்றுலா, மர நடுகை இயக்கம், மற்றும் பொருளாதார அபிவிருத்தி திட்ட செயல்கள்.

(ஆ) அங்கத்தினர் ஒருவர் செய்தார் என்று சொல்லப்படும் முறைப்பாடுகளுக்குறிய தவரான நடத்தை பற்றி அல்லது பதவி வகிக்கின்ற ஒருவர் சங்கத்தின் சொத்துக்களை தவரான முறையில் உபயோகித்தார் என்ற முறைப்பாடுகளை விசாரித்தல்.

(இ) சங்கத்தின் கொள்கைகளுக்குள் அமைந்த வேறு செயல்கள்.

ii. உப குழுவுக்கு நிறைவேற்று சபையில் இருந்து ஆகக்குறைந்தது 3 பேராவது சேர்த்துக் கொள்ள வேண்டியதோடு மற்றவர்களை

அங்கத்தினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்து கொள்ளலாம்.

iii. தேவைப்பட்டால் ஓர் உப குழுவைக் கலைத்துவிட்டு புதிய ஒரு குழுவை அமைக்கும் அதிகாரம் நிறைவேற்று சபைக்கு உண்டு.

20 வது விதி – சங்கத்தின் மகாசபைக் கூட்டம்

i. கீழ்வருமாறு மகாசபைக் கூட்டம் மூன்று பிரிவுகளையுடையது. அதாவது வருடாந்த மகாசபைக் கூட்டம் சங்கத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியின் பேரிலும், தீர்மானப்படியும் அல்லது தலைவரினால் கூட்டப்படும் விசேட மகாசபைக் கூட்டம், சாதாரண மகாசபைக் கூட்டம் என்பனவாகும்.

(அ) வருடாந்த மகாசபைக் கூட்ட நிகழ்ச்சியில் பிரதான செயலாளரின், பொருளாளரின் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டு அனுமதி பெறுதல், எதிர்வரும் வருடத்திற்கு நிறைவேற்று சபையை தெரிவு செய்து கொள்ளல் ஆகியவை சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) சங்கத்தின் நிறைவேற்று சபையின் அனுமதிப்படியும், தீர்மானப்படியும் நடத்தப்படுகிற விசேட மகாசபைக் கூட்ட நிகழ்ச்சியில் விதிகளை மாற்றியமைத்தல், புதுப்பித்தல் சட்ட விதிகளின் புதிய விதிகளை சேர்த்துக் கொள்ளல் என்பவை மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படும்.

(இ) சங்க அங்கத்தினர்களில் 25 பேருக்கு குறையாத அங்கத்தினர்களைக் கொண்டு தலைவருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட ஒரு விசேட காரணத்திற்கு தீர்மானம் எடுப்பதற்கு தலைவரால் கூட்டப்படும் விசேட மகாசபைக் கூட்ட நிகழ்ச்சியில் அவ்விதம் குறிப்பிடப்படும் விசேட காரணம் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படும்.

(ஈ) தலைவரால் அல்லது நிறைவேற்று சபையால் அவசியம் என்று கருதப்படும் பட்சத்தில் நடைபெறும் சாதாரண மகாசபைக் கூட்ட நிகழ்ச்சியில் கலந்துரையாட வேண்டிய முக்கிய விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படும்.

ii. வருடாந்த மகா சபைக் கூட்டம் ஆவணி மாதம் 31ம் திகதிக்கு முன் நடத்தப்படுதல் வேண்டும்.

iii. சகல மகாசபைக் கூட்டங்களின் தலைமைத்துவம் தலைவரால் ஏற்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தால் தலைவரால் சமுகம் அளிக்க முடியாவிட்டால் சபை தெரிவு செய்யும் முத்தோர் சபை அங்கத்தினர் ஒருவர் தலைமை ஏற்க வேண்டும்.

iv. சகல மகாசபைக் கூட்டத்திற்கும் சாதாரணமாக 50 பேர் சமுகமளிக்க வேண்டும் அல்லது அங்கத்தினரில் முன்றில் இரண்டு பங்கினர் சமுகமளிக்க வேண்டும்.

v. சங்கத்தின் சகல வகுப்பினையும் சேர்ந்த அங்கத்தினர்கள் மகாசபையின் அங்கத்துவத்துக்கு தகுதியானவர்களாவதோடு அவர்களுக்கு அவற்றில் கலந்து கொள்ள உரிமையுண்டு.

vi. சகல மகாசபைக் கூட்டங்களுக்கும் 14 நாட்களுக்கு முன் அங்கத்தினர்களுக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும்.

21 வது விதி – சங்கத்தின் நிதி

i. சங்கத்திடம் ஒரு நிதி இருக்க வேண்டும்.

ii. இந்த நிதி :

(அ) அங்கத்துவப் பணம் மற்றும் நன்கொடையாகக் கிடைக்கும் நிதியுதவி.

(ஆ) இலங்கை தேசிய சர்வோதய சிரமதான கூட்டிணைவு சங்கத்தினால் வழங்கப்படும் நிதியுதவி.

(இ) அரசாங்கத்தினால் அல்லது பிரதேச நிறுவங்களினால் அல்லது அரச சார்பற்ற வேறு தேசிய நிறுவனங்களினால் வழங்கப்படுகிற நிதியுதவி.

(ஈ) சங்கத்திற்கு உரிமையான அசையும், அசையா சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானம்: சக

(உ) வேறு தேசிய வழிகளில் கிடைக்கும் வருமானம் வரவு வைக்கப்பட வேண்டும்.

iii. இந்தப் பணத்தினால்:

(அ) சங்கத்தின் நிறைவேற்று சபையால் குறிப்பிட்ட சில செயல்களுக்கு அல்லது சேவைகளுக்கு செலவு செய்ய வேண்டியதால் குறிப்பிட்ட ஒரு செலவு எல்லைக்குள் செலவு செய்யலாம்.

(ஆ) சங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு.

(இ) அதிகாரிகள், தொண்டர்கள் போன்றவர்களினால் சங்கத்தின் வேலைகளுக்காக செய்யப்படும் செலவு.

(ஈ) தபால் கட்டணம், தந்திக் கட்டணம், தொலைபேசி அழைப்புக்கள், எழுதும் உபகரணங்கள், அச்சிடுதல் போன்றவற்றிற்கு செய்யும் செலவுகள்.

(உ) நிறைவேற்று சபை வைத்திருக்கும் பணத்தினால் புண்ணிய உபகாரம் செய்தல்.

(ஊ) கணக்குப் பரிசோதனைக்கான செலவு.

(எ) அலுவலக மற்றும் பொருள், பண்டங்களை விலை கொடுத்து வாங்குவதற்குத் தேவையான பணத்தை எடுக்கலாம்.

iv. சங்கத்திற்கு கிடைக்கும் சகல பணமும் மட்டுப்படுத்தப்பட்ட .....சர்வோதய சிரமதான சங்கம் என்ற பெயரில் சங்கத்தில் நிறைவேற்று சபை ஏற்றுக் கொண்ட வங்கியொன்றில் வைப்பிலிட வேண்டும். அத்துடன் காசோலைகளில் சங்கத்தின் இரண்டு அதிகாரிகள் கையெழுத்திட வேண்டும். அதில் ஒருவர் சங்கத்தின் பொருளாளராக வேண்டும். மற்றவர் தலைவர் அல்லது பிரதான செயலாளராக இருக்க வேண்டும்.

v. அவசர செலவுக்காக பொருளாளர் ரூ.....க்கு அதிகப்படாத தொகையொன்றை தன்னிடம் வைத்திருக்கலாம்.

22 வது விதி – சங்கத்தின் புத்தகங்கள் பதிவேடுகள் ஆவணங்கள் என்பவற்றை பரிசோதிக்கும் அதிகாரம்

சங்கத்தின் பிரதான செயலாளருக்கு மூன்று நாட்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவித்தல் கொடுத்து சங்கத்தின் எந்த எந்த அங்கத்தினருக்கும் புத்தகங்கள், பதிவேடுகள் , ஆவணங்கள் என்பவற்றை பரிசோதிக்க முடியும்.

23 வது விதி – கணக்குப் பரிசோதனை

வருடாந்த கணக்குப்பரிசோதனைக்காக சங்க அமைப்பு விதிகளுக்கமைய அனுமதிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்கள் சங்கத்தின் நிறைவேற்று சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

24 வது விதி – வழக்குப் போடுவதற்கு வழக்கு போடப்படுவதற்கு இருக்கும் அதிகாரம்

வழக்கு போடுவதற்கு சங்கத்திற்கு அதிகாரம் உண்டு அத்துடன் சங்கத்தின் மீது வழக்குப் போடப்படுவதற்கும் சங்கம் கீழ்ப்படிய வேண்டும். அப்படியான நிலைகள் ஏற்படும் போது தலைவர், பிரதான செயலாளர் சங்கத்தின் சார்பில் ஆஜராக வேண்டும். ஆனாலும் நிறைவேற்று சபையின் தீர்மானப்படி வெறொரு அங்கத்தினரை ஆஜராக்குவதற்கு நிறைவேற்று சபைக்கு அதிகாரம் உண்டு.

25 வது விதி – சங்கத்தின் நிதி ஆண்டு

ஏதாவது நிதியாண்டு ஏப்ரல் மாதம் முதல் திகதியில் இருந்து பன்னிரண்டுமாத காலத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

26 வது விதி – சங்கத்தின் சொத்து

ஏதாவது விலை கொடுத்து வாங்குதல், முதலீடு, பரிசு, நன்கொடை, ஒப்பந்த முலம் சொத்தை மாற்றுதல், வேறு வகையில் சங்கத்திற்கு சொந்தமாகும் அசையும், அசையா சொத்துக்கள் எதையும் ஏற்றுக் கொள்ளவும், அவற்றைக் கொண்டு நடத்தவும், அவற்றை சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உபயோகப்படுத்தவும் சங்கத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.
அத்துடன் அவ்வப்போது அமுலில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து அந்த சொத்துக்களை விற்கவோ, ஈடுவைக்கவோ, குத்தகைக்கு விடவோ, கைமாற்றிக் கொள்ளவோ, மற்றவர்களிடமிருந்து ஒதுக்கி வைத்திருக்கவோ சங்கத்திற்கு அதிகாரம் உண்டு.

27 வது விதி – சங்கத்தின் முத்திரை

நிறைவேற்று சபையால் தீர்மானிக்கப்பட்ட முத்திரை சங்கத்தில் இருக்க வேண்டும். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய முவரில் இருவர் முன்னிலையிலேயே இந்த முத்திரை அந்த ஆவணங்களிலும் பதிக்கப்பட வேண்டும். அவர்கள் வருகை தந்ததற்கு சாட்சியாக அந்த ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும்.

28 வது விதி – விதிகளில் திருத்தியமைத்தல் செய்தல்

i. சங்கத்தின் விதிகளில் திருத்தியமைத்தல் செய்தல், புதிதாக சேர்த்துக்கொள்ளல், திருத்தியமைத்தல் என்பவை அதற்காகவே கூட்டப்பட்ட விடே மகாசபைக் கூட்டத்தில் அந்த மாற்றங்களுக்கு அனுசரணையாக வருகை தந்திருக்கும் அங்கத்தினர்களின் முன்றில் இரண்டு பங்கினர் சம்மத வாக்கின்படியன்றி அவற்றை செய்தல் கூடாது.

ii. அந்த மாற்றம் அல்லது திருத்தம் புதிய சேர்க்கை என்பன சங்கத்தின் செயலாளரால் அல்லது அவர் சமுகமளிக்காத விடத்து அந்த கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற தலைவரால் அந்த விசேட மகா சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

29 வது விதி – கருத்து தெளிவு

இந்த விதிகளின் கருத்தை தெளிவுபடுத்துவது தொடர்பாக ஏதாவது சிக்கல் தோன்றுமானால் அதை சங்கத்தின் செயலாளர் நிறைவேற்று சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதோடு அதற்காக நிறைவேற்று சபை அளிக்கின்ற கருத்து, விளக்கம் இறுதியானதாகும். அந்த கருத்து, விளக்கத்தை ஏற்று அதன்படி செயல்படுத்த சகல அங்கத்தினர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.

30 வது விதி – அங்கத்தினர்களின் சச்சரவு

சங்கத்தின் செயல்கள் அல்லது செயற்பாடுகள் தொடர்பாக சங்கத்திற்கும் அதன் அங்கத்தவருக்குமிடையில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் அதை சங்கத்தின் காரியதரிசி நிறைவேற்று சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதோடு அதற்கு நிறைவேற்று சபை அளிக்கும் முடிவு இறுதி முடிவாகும், அந்த முடிவு நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படக்கூடாது என்பதோடு அந்த முடிவை ஏற்று அதன்படி செயல்பட அந்த அங்கத்தினர் கட்டுப்பட்டுள்ளார்.

31 வது விதி – சங்கத்தைக் கலைத்தல்

ஏதாவது ஒரு காரணத்திற்காக சங்கம் கலைக்கப்பட்டால் ஏதாவது வங்கியில் சங்கத்தின் பெயரில் வைப்பில் இடப்பட்டிருக்கும் பணம் உட்பட சங்கத்திற்கு சொந்தமான சகல அசையும், அசையா சொத்துக்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவியை வகித்த அதிகாரிகளினால் இலங்கை சர்வோதய சிரமதான (கூட்டிணைப்பு) சங்கத்தின் நிறைவேற்று சபையினால் அதிகாரமளிக்கப்படும் வேறு நபரிடம் அல்லது நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

19.....ஆண்டு.....மாதம்.....திகதி

.....

.....என்ற

இடத்தில் நடத்தப்பட்ட ஆரம்ப மகாசபைக் கூட்டத்தில்
ஏற்றுக் கொள்ளப்பட்ட

.....மாகாணத்தில்

..... மாவட்டத்தில்

..... தேர்தல் தொகுதியில்

..... உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

..... பிரதேசத்தில்

உள்ள..... கிராமத்தின்/நகரத்தின்

சர்வோதய சங்க விதிகளாகும்

உறுதிசெய்தது

....

தலைவர் பிரதான செயலாளர்

.....

பொருளாளர்

அங்கத்தினர் 10 பேர்

1. ..... 6. .....

2. ..... 7. .....

3. ..... 8. .....

4. ..... 9. .....

5. ..... 10. .....